### நாட்டின் வளர்ச்சிக்கு விமான நிலையங்கள் மிக முக்கியமானவை!

# ஓட்டுக் கண்ணோட்டத்தைவிட, நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டமே முக்கியம்!

## பரந்தூர் விமான நிலைய திட்ட கைவிடலை மறுபரிசீலனை செய்வீர்! திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஆக. 29 –

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு விமான நிலையங்கள் மிக முக்கியமானவை என்பது பொருளாதாரம் தெரிந்தவர்களின் கருத்து! பல கட்ட ஆய்வுகளுக்குப் பிறகு, பரந்தூர் விமான நிலையம் உறுதி செய்யப்பட்டு – பணிகளும் தொடங்கும் ஒரு கால கட்டத்தில் திட்டத்தை ரத்து செய்வதா? ஓட்டுக் கண்ணோட்டத்தைவிட, நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டமே முக்கியம்! பரந்தூர் விமான நிலையத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும் என தமிழ்நாடு அரசுக்குத் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை வருமாறு:

பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படுவதாகத் தமிழ்நாட்டின் தற்போதைய அரசு அறிவித்திருப்பது தவறான முடிவாகும். தயாரிப்பு நிறுவனங்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும் பெருகிவருவது – தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையானதாகும். அதற்குப் பன்னாட்டுத் தொடர்புகளும், வான்வழிப் பயண வசதிகளும் இன்றிய மையாதவை. உலகம் முழுவதும் உடனடி சரக்குப் போக்குவரத்துக்கும், மக்கள் போக்குவரத்துக்கும் வான்வழியே விரைவானதாகவும், இன்றைய உலகின் தேவைகளுக்கு ஈடுகொடுப்பதாகவும் அமைகிறது.

**குடியிருப்புப் பகுதிகள் பாதிக்கப்படும் என்பதால் தான், மாற்றுத் திட்டங்கள் யோசிக்கப்பட்டன!**

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் முன்னோக்கோடு தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது 2007 ஆம் ஆண்டு முதலே, சென்னையில் இரண்டாவது ஓடுதளம் அமைக்க வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அப்போதும் இதே போல் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இன்றுள்ள அளவு நெருக்கடியான நிலையில்லை என்றாலும், குடியிருப்புப் பகுதிகள் பாதிக்கப்படும் என்பதால் தான், மாற்றுத் திட்டங்கள் யோசிக்கப்பட்டன.

மீனம்பாக்கத்தில் தற்போதுள்ள சென்னை விமானநிலையத்தில் பின்னாட்களில் விரிவாக்கம் செய்யப்பட்டு, புதிய முனையங்கள் உருவாக்கப்பட்டாலும் கூட, புதிய ஓடுதளம் அமைக்க இயலாத நிலையில்தான், வேறோர் இடத்தில் இரண்டாவது விமானநிலையத்தை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

புதிய விமானநிலையத்திற்குத் தேவையானது அளவு சுமார் 5000 ஏக்கர்; சென்னை நகரத்துக்குள் அப்படியொரு இடத்தைத் தேர்வு செய்ய முடியாது என்பதால் சுற்றுவட்டார மாவட்டங்களில் தேடும் பணி நடைபெற்றது. பின்னர் இரண்டு முறை ஆட்சி செய்த அ.தி.மு.க. ஆட்சியால், கிடப்பில் போடப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுள் இந்த விமான நிலையத் திட்டமும் ஒன்று. 10 ஆண்டுகாலம் தமிழ்நாட்டின் வளர்ச்சி, குறிப்பாகச் சென்னையின் வளர்ச்சி (மெட்ரோ ரயில் விரிவாக்கம், பாலங்கள், மதுரவாயல் துறைமுகம் பறக்கும் சாலை, புதிய கட்டமைப்புகள் உள்பட) பல்வேறு வகையிலும் முடக்கப்பட்டது.

**விவசாய நிலங்கள் எல்லாம் ‘பிளாட்’ போடப்பட்டு விற்பனைக்கு வந்துவிடவில்லையா?**

இந்தக் காலகட்டத்தில் சென்னையில் மக்கள் தொகையும், வீடுகளும் பெருகிவிட்டன. இவற்றையெல்லாம் முன் கணித்து, திருமழிசையில் துணை நகரம் அமைக்கும் திட்டத்தை 20062011 ஆட்சிக் காலத்தில் கலைஞர் அறிவித்தார். அப்போதும், நன்செய், புன்செய் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் என்று பல கட்சியினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால், அந்தத் திட்டம் கைவிடப்பட வேண்டியதானதே தவிர, அந்த விவசாய நிலங்கள் காப்பாற்றப்பட்டனவா? அப்படியே இன்றும் இருக்கின்றனவா? விவசாய நிலங்கள் எல்லாம் ‘பிளாட்’ போடப்பட்டு விற்பனைக்கு வந்துவிடவில்லையா?

**முன்னோக்குத் திட்டமிடுவதைத் தடுத்தால், முறையான வளர்ச்சி இருக்காது!**

சென்னையின் சுற்றுவட்டாரப் பகுதிகள் முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள். திட்டமிட்டு, சரியான சாலை, உள்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாகியிருக்க வேண்டிய சென்னையின் விரிவாக்கப் பகுதிகள், இன்றும் குறுகலான, கோணலான சாலைகள், போதிய உள்கட்டமைப்பு இன்மை, நீர் தேங்குமிடங்களாக மாறிப் போயிருக்கின்றன. இதனால் நட்டம் யாருக்கு? பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப அரசு முன்னோக்குத் திட்டமிடுவதைத் தடுத்தால், முறையான வளர்ச்சி இருக்காது; ஆங்காங்கு வீக்கமே இருக்கும். அதுதான் இப்போது சென்னையின் நிலைமை. வளர்ச்சியை முறைப்படுத்தாமல், தேவைகளைத் தீர்க்காமல், முன்னோக்குப் பார்வையுடன் அடிப்படை வசதிகளை உருவாக்காமல் போனால், உருவாக்குவதைத் தடுத்தால் இதுதான் நடக்கும்.

வளர்ச்சிக்கென சில கசப்பு மருந்துகள் தேவை. நிரந்தர முன்னேற்றம், வளர்ச்சியை, தற்காலிக ‘வாக்கு வங்கி லாபம்’ காரணமாகத் தொலைத்துவிட அனுமதிக்கக் கூடாது! எனவே, சரியான முடிவுகள் (சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக மாற்று வழிகளை யோசித்து செய்வது) அவசியம்!

நவீன சிங்கப்பூரை உருவாக்கிய சிற்பியான பெரு மதிப்பிற்குரிய லீ குவான் யூ, இந்தியாவின் உண்மையான வளர்ச்சிக்கான சவால்களாக இரு பெரும் காரணங்களைக் குறிப்பிட்டார். ஒன்று ஜாதி! (அதுகுறித்துப் பல முறை நாம் உரைகளில் எடுத்துக்காட்டியிருக்கிறோம்) மற்றொன்று முறையான போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மை; அதற்கு முதன்மை யிடம் கொடுத்து உருவாக்காமை! இப்போது அவற்றுடன், உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்க விடாமல் தடுப்பதையும் சேர்க்க வேண்டும்.

**நம்முடன் போட்டிபோட்டு வருகின்றன!**

தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள கருநாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்கள் உள்கட்டமைப்புத் திட்டங்களைப் பெருக்குவதிலும், புதிய நகரங்களை உருவாக்குவதிலும் வேகம் காட்டிவருகின்றன. நம் கண் முன்பே பெங்களூரு புதிய விமான நிலையம் உருவாக்கியதையும், அய்தராபாத் புதிய விமான நிலையத்தை உருவாக்கி விரிவாக்கி வருவதையும் பார்க்கிறோம். தொழில் துறையிலும், தகவல்தொழில்நுட்பத் துறையிலும் இரு மாநிலங்களும் நம்முடன் போட்டி போட்டு வருகின்றன.

**அரசின் ஒத்துழைப்பும், வரவேற்பும் இன்மையால் கைவிட்டுப் போகும் நிறுவனங்கள்!**

பெரும் தொழில் நிறுவனங்கள் ஒரு நாட்டில் அல்லது மாநிலத்தில் முதலீடு செய்ய வருகிறார்கள் என்றால், அவர்களுக்குத் தேவை நிலையான, அமைதியான, கலவரங்களற்ற சூழலும், போதுமான போக்குவரத்து, உள்கட்டமைப்பு வசதிகளும் தான். அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய தொழிற்சாலைகள் பிற மாநிலங்களை நோக்கிச் சென்றுவிட்டன. இவற்றில் ஒன்றிய அரசு மடைமாற்றும் நிறுவனங்கள் ஒருபுறம் என்றால், முறையான வசதிகளும், அனுமதிகளும், அரசின் ஒத்துழைப்பும், வரவேற்பும் இன்மையால் கைவிட்டுப் போகும் நிறுவனங்கள் மறுபுறம்.

சென்னையின் வளர்ச்சியையும், மீனம்பாக்கம் விமான நிலையத்தின் இடப்போதாமையையும் கருத்தில் கொண்டு சென்னைக்கு அருகில் இரண்டாவது விமான நிலையம் அமைப்பதற்காகப் பரந்தூர், பன்னூர், படாளம் மற்றும் திருப்போரூர் ஆகிய 4 இடங்கள் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தால் (AAI) முதற்கட்டமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் பல்வேறு வகையிலும் ஏற்றதாக இருப்பதால் பரந்தூர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குத் தேவையான 4,970 ஏக்கர் நிலப்பரப்பில் பெருமளவிலான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே அம் மக்களுக்கு உரிய தொகை வழங்கப்பட்டுவிட்டது. பரந்தூர் ஏகானபுரம் பகுதிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. இந்நிலையில் விவசாயத்தைக் காரணம் காட்டி, இத் திட்டத்தைச் சிலர் எதிர்க்கிறார்கள் என்று அரசியல் நோக்கத்திற்காகக் கடந்த ஆட்சியில் பேசிவந்தனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சூழலில், இப்போது அதே காரணத்திற்காக புதிதாக அமைந்துள்ள த.வெ.க. அரசும் அத் திட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளது. மக்களுக்குப் பாதிப்பில்லாமல் ஓர் இடத்தைத் தேர்வு செய்து அங்கு விமான நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளனர்.

**5000 ஏக்கர் நிலத்தைப் புதிதாக இனி அடையாளம் காண முடியுமா?**

ஒரு விமான நிலையத்தை நினைத்த மாத்திரத்தில் உருவாக்கிவிட முடியுமா? கட்டத் தொடங்கினால், அதன் கட்டுமானத்திற்கே எட்டு முதல் பத்து ஆண்டுகள் தேவைப்படும். அதற்கு உரிய இடத்தைத் தேர்வு செய்ய எவ்வளவு காலம் ஆகும்? சென்னையைச் சுற்றி, மக்களோ, விவசாயமோ, நீர்நிலைகளோ பாதிப்படையாமல் 5000 ஏக்கர் நிலத்தைப் புதிதாக இனி அடையாளம் காண முடியுமா? மக்கள் வசிக்காத, நீர்நிலைகள் இல்லாத வறண்ட நிலங்கள் சென்னையைச் சுற்றி இருக்கின்றனவா? அப்படி கண்டுபிடிக்கப்பட்டால், அந்த இடத்துக்கு இந்திய விமான நிலைய ஆணையத்தின் விதிகளின்படி ஒப்புதல் கிடைக்க வேண்டும். அப்போது அந்த இடத்தில் உள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால், அதற்குப் பதில் என்ன? இப்பகுதிகளில் புதிதாக சில சட்டச் சிக்கல், வழக்குகளும் ஏற்படக் கூடுமே!

நீர்பிடிப்புப் பகுதிகள் பாதிக்கப்படாமல், சூழலியல் பாதிக்கப்படாமல் இருக்க மாற்று ஏற்பாடுகளைத் திட்டமிட வேண்டுமே தவிர, அதற்கான அறிவியல் அடிப்படையிலான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, விமான நிலையம் போன்ற உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தடுப்பது எப்படி சரியாக இருக்க முடியும்?

சென்னையின் வளர்ச்சி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையானது. தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கும், தொழில் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. இவ் விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டதன் மூலம் மேலும் பல தொழில் நிறுவனங்களின் வரவு தடைப்படும். அதற்குள் அண்டை மாநிலங்கள் தங்கள் உள்கட்டமைப்பைப் பெருமளவு உருவாக்கியிருப்பார்கள். இவற்றையெல்லாம் முறையாகக் கையாளாமல், திட்டமிடாமல் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பதால் பயன் என்ன?

**மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்!**

தமிழ்நாடு அரசின் இந்த முடிவு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். காலம் கழிந்துவிடவில்லை. பொருளாதார, உள்கட்டமைப்பு, சூழலியல் வல்லுநர்களைக் கொண்டு குழு அமைத்துப் பரிசீலித்து, பரந்தூர் விமான நிலையத் திட்டம் மீண்டும் ஏற்கப்பட வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர், கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால்

# மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் விலை கடும் உயர்வு! விளம்பரங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் அரசு!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

சென்னை, ஆக. 29 -

தவெக அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் விலைகள் விண்ணைத் தொடும் அளவிற்கு அதிகரித்துள்ளன. விளம்பரங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் தவெக அரசு, மக்கள் சந்திக்கும் நெருக்கடியைக் கண்டுகொள்ளாமல் கண்மூடி மௌனமாக இருப்பதாக தி.மு.க. ஐ.டி. விங் விமர்சித்துள்ளது.

தமிழ்நாட்டில் சமையல் எண்ணெய், சர்க்கரை, காய்கறிகள் உள்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதை கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தவெக அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர், சமையல் எண்ணை, காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை என அத்தியாவசியப் பொருட்களின் இந்த கடுமையான விலை உயர்வு என்பது மக்களை பெரிதும் பாதித்து வருகிறது. இதனிடையே, பணவீக்கம் தேசிய சராசரி 4.45 சதவிகிதமாக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் பணவீக்கம் 5.44 சதவிகிதமாக உயர்ந்துள்ளதை சுட்டிக்காட்டி திமுக ஐடி விங் கடுமையாக விமர்சித்துள்ளது.

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் விலைகள் விண்ணைத்தொடும் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் விளம்ப ரங்களில் மட்டுமே கவனம் செலுத்தும் தவெக அரசு, மக்கள் சந்திக்கும் நெருக்கடியைக் கண்டுகொள்ளாமல் கண்மூடி மௌனமாக இருப்பதாகவும் தி.மு.க. ஐ.டி.விங் குற்றம் சாட்டியுள்ளது.



தாம்பரம் மாநகராட்சி டி.டி.கே நகரில் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்டு வேகமாக நடைபெற்ற வந்த மழைநீர் கால்வாய் பணிகள் தற்போது ஆட்சி மாற்றத்திற்கு பிறகு கால்வாய் பணிகள் நடைபெறுவில்லை மழை காலம் நெருங்கி வருவதால் குடியிருப்போர் நலசங்கத்தினர் மற்றும் பொது மக்கள் தாம்பரம் மாநகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்களிடம் புகார் கூறியதை தொடர்ந்து அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மழைக்கு முன்பு பணிகளை முறைப்படுத்த கேட்டுக் கொண்டார். உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, 4–வது மண்டல குழுத்தலைவர் – பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ்,மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி,மாநகர அமைப்பாளர்கள் எஸ்.ஜி.கருணாகரபாண்டியன்,இரா.இரத்தினகுமார் மற்றும் குடியிருப்போர் நலசங்க நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் உடனிருந்தனர்.

---

### விலைவாசி கடும் உயர்வு!

# உரிக்காமலேயே கண்ணீரை வரவைக்கும் வெங்காய விலை!

## இல்லத்தரசிகள் கவலை!

சென்னை, ஆக. 29 -

த.வெ.க. ஆட்சியில் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் வெங்காய விலை உயர்வால் இல்லத்தரசிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

தவெக ஆட்சி அமைந்ததில் இருந்து, கடந்த 3 மாதங்களில் சர்க்கரை, பருப்பு, எண்ணெய், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வால் ஏழை, எளிய மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை தொடர்ந்து வெங்காய விலை கிடு கிடுவென உயர்ந்து கிலோ 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மொத்தச்சந்தையில்10கிலோ கொண்ட வெங்காய மூட்டை 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இந்நிலையில் வெங்காய விலை உயர்வால் இல்லத்தரசிகள் கவலை அடைந்துள்ளனர். விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் தமிழ்நாடு அரசுக்கு வலியுறுத்தி உள்ளனர்.

---

### நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கும் – அமைச்சர்

# மரியவில்சன் இங்கிலாந்தின் அரசர் அல்ல!

## உயர்நீதிமன்றம் கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 29 -

தமிழக நிதியமைச்சர் மரியவில்சன் இங்கிலாந்தின் அரசர் அல்ல. அவர் நீதிமன்றத்தில் ஆஜராக மாட்டேன் எனக் கூற முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன், கடந்த 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் தேதி புதுச்சேரியில் வசித்து வரும் அவரது சகோதரர் மற்றும் குடும்பத்தினரை தாக்கியதாக லாஸ்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்திருந்தனர்.

புதுச்சேரி குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி அமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்த மனு, உயர்நீதிமன்ற நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மரிய வில்சன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்து வருவதால், நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதற்கு கண்டனம் தெரிவித்த நீதிபதி, நீதிமன்றத்துக்கு செல்ல முடியாத எனக்கூற நிதியமைச்சர் மரிய வில்சன் இங்கிலாந்தின் அரசர் அல்ல; என்றும் அமைச்சர் சட்டத்துக்கு மேலானவர் அல்ல என்ற தகவலை மக்களிடம் கொண்டுச் சேர்க்க விரும்பவில்லை எனக்கூறி,விசாரணையை பிற்பகலுக்கு தள்ளிவைத்துள்ளார்.

---

### சமையல் எரிவாயு சிலிண்டருக்கான இ.கே.ஒய்.சி. காலக்கெடு முடிவதால்

# சமையல் எரிவாயு முகமைகளில் குவிந்த மக்கள்!

சென்னை, ஆக. 29 -

சமையல் எரிவாயு சிலிண்டருக்கான இகேஒய்சி சரிபார்ப்பு செய்வதற்கான காலக்கெடு முடிய உள்ளதால் எரிவாயு முகமைகளில் மக்கள் குவிந்து வருகின்றனர் எல்பிஜி எரிவாயு சிலிண்டர்களைப் பயன்படுத்தும் கோடிக்கணக்கான நுகர்வோருக்கு இது மிக முக்கியமான செய்தியாகும். வீட்டு எரிவாயு இணைப்புகளுக்கான ஆதார் அடிப்படையிலான இகேஒய்சி (eKYC) காலக்கெடு ஆகஸ்ட் 31ம் தேதியுடன் முடிவடைய உள்ளது.

கால கெடு நெருங்கி வருவதால், பயோமெட்ரிக் பதிவு செய்யாத நுகர்வோர் அந்தந்த எரிவாயு முகமைகளில் குவிந்து வருகின்றனர்.

ஆனால், இகேஒய்சி செயல்முறையின் முதல் கட்டமான ஆதார் எண்ணை 14 இலக்க எல்பிஜி (LPG) அடையாள எண்ணுடன் இணைப்பதிலேயேசிலநுகர்வோருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது மக்கள் கூறியதாவது:

சில மாதங்களுக்கு முன்பு எரிவாயு முகமையைத் தொடர்புகொண்டேன்.

என்னால் அதிக தூரம் பயணம் செய்ய முடியாது என்பதால், வீட்டுக்கே ஒருவர் வந்து பயோமெட்ரிக் பதிவு செய்வார் என்று கூறினர். ஆனால் யாரும் வரவில்லை.

பின்னர்வீட்டிலிருந்தே இந்தப் பணியை மேற்கொள்ள முயன்றும் முடியவில்லை. முகமை வழங்கிய ரசீதில் அச்சிடப்பட்டிருந்த எல்பிஜி அடையாள எண்ணும் தவறாக இருந்தது.

இறுதியில், இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணை அளித்து சரியான எல்பிஜி அடையாள எண்ணை கண்டறிந்தேன். இதுபோல், வேறு பகுதிகளுக்கு குடிபெயர்ந்து எரிவாயு முகமையை மாற்றிய நுகர்வோரும் இகேஒய்சி நடைமுறையை நிறைவு செய்வதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டையிலிருந்து

# நேபாளம் வெள்ளத்தில் சிக்கிய 7 பேர் குடும்பத்தினருக்கு பல்லாவரம் இ.கருணாநிதி நேரில் ஆறுதல் கூறி விவரம் கேட்டறிந்தார்!

சென்னை, ஆக. 29 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டையில் இருந்து தனியார் ஆன்மிக சுற்றுலா ட்ராவல்ஸ் மூலம் ஆன்மீகச் சுற்றுலா சென்ற 49 பேரில் ஏழு பேர் குரோம்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள் அவர்களின் நிலைமை என்னவென்று தெரியவில்லை என தொலைக்காட்சியில் செய்தி பரவியதை தொடர்ந்து தகவல் அறிந்து மாவட்ட கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினர் இ. கருணாநிதி முன்னாள் நகர மன்ற உறுப்பினராக இருந்த குரோம்பேட்டை ஜமீன் ராயப்பேட்டை சேர்ந்த குமார் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த அவரது மனைவி அமுதா மகன் கிஷோர் உறவினர்கள் ராஜலட்சுமி ஆதி லக்ஷ்மி வேளவேந்தர் மஞ்சுளா விக்கிரமன் சுற்றுலா நிறுவனத்தின் உரிமையாளர் சத்யன் நாராயணன் உட்பட ஏழு பேர் அந்த சுற்றுலா நிறுவனத்தின் மூலம் நேபாளம் சென்றிருந்ததாகவும் அவர்களின் நிலைமை என்னவென்று தெரியாத இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து குமார் அவர்கள் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்கள் குடும்பத்தினரை சந்தித்து தங்கள் மகன் கடைசியாக எப்பொழுது தொடர்பு கொண்டார் என்பதை கேட்டு அறிந்து அவர் நேபாள விமான நிலையத்தில் வந்திருப்பதாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட அன்று காலை தொலைபேசி மூலம் எனக்கு தொடர்பு கொண்டார் அதற்குப் பிறகு அவரிடம் இருந்து எந்த தொடர்பும் இல்லை என தெரிவித்தார் அதைத்தொடர்ந்து இ. கருணாநிதி அவர்கள் சென்னை விமான நிலைய அதிகாரிகளை தொடர்பு கொண்டு நேபாள விமான நிலையத்தில் இந்த முகவரியை கொண்டவர்கள் இந்தப் புகைப்படத்தில் உள்ளவர்கள்யாராவது இருக்கிறார்களா என கேட்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதை தொடர்ந்து விமான நிலைய அதிகாரிகளுக்கு அவர்களைக் குறித்த தகவல்களை அனுப்பினார் அதிகாரிகள் மேல் அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டு தங்களுக்கு தெரிவிப்பதாக கூறினார்கள்.

மேலும் எந்தவித உதவிகள் தேவைப்பட்டாலும் தன்னை தொடர்பு கொள்ளுமாறு அவர்களிடம் கூறி மிக விரைவில் அவர்கள் நல்ல நிலைமையில் தங்கள் இல்லங்களுக்கு வருவார்கள் என்று ஆறுதல் கூறினார் அப்பொழுது மாவட்ட கழக பிரதிநிதி க.ரமேஷ் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் மாமன்ற உறுப்பினர் ஆண்டாள் கண்ணன் பகுதி துணைச் செயலாளர் கே. பூபதி பகுதி தொண்டரணி அமைப்பாளர் ஜெயபால் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



நேபாள பெருவெள்ளத்தில் சிக்கிய பல்லாவரம் குரோம்பேட்டையைச் சார்ந்த முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் குமார் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் நிலைமை குறித்து அவர்களின் இல்லத்திற்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி நேரில் சென்று அவரை சந்தித்து பேசினார். மாவட்டக் கழக பிரதிநிதி க. ரமேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன், மாமன்ற உறுப்பினர் ஆண்டாள், என். கண்ணன், பகுதி கழகத் துணைச் செயலாளர் கே. பூபதி, பகுதி தொண்டரணி அமைப்பாளர் ஜெயபால் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.